

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 22.08.2026

# காங்கிரஸ் முகத்தில் கரி பூசிய விஜய்!

**கேரள காங்கிரஸ் அமைச்சரவை பதவி ஏற்பு விழாவிற்கு வருவதாகச் சொல்லிவிட்டு வர மறுத்தவர் விஜய். ‘டெல்லி வரும் போது சோனியாவையும் ராகுலையும் சந்திப்பேன்’ என்று சொல்லி விட்டுச் சந்திக்காமல் திரும்பி வந்தவர் விஜய். (இரண்டாவது முறை சென்றபோதுதான் சந்தித்தார்!) வைகோ புத்தகத்தை ராகுல் வெளியிடும் போது முதல் பிரதியை வாங்கிக் கொள்வதாக ஒப்புக் கொண்ட விஜய், திடீரென வர மறுத்தார். இந்தியா கூட்டணிக்குள் அவர் வருவார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தது காங்கிரஸ். அதையும் விஜய் ஏற்றுக் கொள்ளவில்லை. விஜய் இல்லாமல்தான் இந்தியா கூட்டணிக் கூட்டமும் நடந்தது. இந்த வரிசையில் தொகுதி மறுவரையறை விவகாரத்திலும் காங்கிரஸ் முகத்தில் கரியைப் பூசி இருக்கிறார் விஜய்.**

மக்களவையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 543 ஆக நிரந்தரம் ஆக்கப்பட வேண்டும் என்ற காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாட்டை தனது நிலைப்பாடாகச் சொன்னார் முதலமைச்சர் விஜய். மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கை தற்போதைய அளவிலேயே நிரந்தரமாகத் தொடர வேண்டும் என்றும் சொன்னார். இதையே 12.8.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றினார்கள்.

காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டியும் நாடகம் போட்டார் முதலமைச்சர் விஜய். இவரின் நாடகத்தைப் புரிந்துகொண்ட தி.மு.க., இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. உடனே, ‘பார்த்தீர்களா? பா.ஜ.க.வுடன் சேர்ந்து விட்டது தி.மு.க.’ என்று திசை திருப்பியது த.வெ.க.

**தொகுதி மறுவரையறை பிரச்சினையை முழுமையாக விளக்கி போராட்டங்களைத் தொடங்கியதும், அதனை இந்தியப் பிரச்சினையாக ஆக்கியதும் திராவிட முன்னேற்றக் கழகமே! தி.மு.க. தலைவராக மட்டுமல்ல; தமிழ்நாடு முதலமைச்சராகவும் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த விவகாரத்தில் மிகச் சரியாகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்தார். செயல்பட்டு வருகிறார்.**

**தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அந்த நடவடிக்கையானது நியாயமான அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்கக்கூடாது என்றுதான் சொல்கிறோம். இந்தப் போராட்டம், எல்லை வரையறைக்கு எதிரானது அல்ல. இந்தப் போராட்டம் நியாயமான எல்லை வரையறையை வலியுறுத்துகிறது” என்று குறிப்பிட்டார்கள்.**

“This fight is not against delimitation. This fight is for fair delimitation” **என்று குறிப்பிட்டார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இதனைப் புரிந்து கொள்ளாமல் த.வெ.க. அமைச்சர்கள் விமர்சித்தார்கள்.**

‘தொகுதி மறுவரையறையை ஆதரிப்பவர்கள் எட்டப்பர்கள்’ என்று காங்கிரஸ் கட்சியும் விமர்சித்தது. துரோகம் இழைப்பதும், உடனிருந்து கொல்வதும் காங்கிரஸ் கட்சிக்குக் கைவந்த கலையாகும். அதனைத் தான் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி செய்து வருகிறது. தமிழ்நாட்டிலும் செய்தது. தி.மு.க. கூட்டணியில் வென்று விட்டு, த.வெ.க. ஆட்சியில் இரண்டு பதவியைப் பெற்றுவிட்டு, ‘தமிழ்நாட்டில் காங்கிரஸ் அலை’ என்று கூச்சம் இல்லாமல் சொல்வதற்கு காங்கிரஸ் கட்சியால் தான் முடியும்.

**இத்தகைய சூழலில் தங்களது கைப்பாவையாக விஜய்யை மாற்ற நினைத்தது காங்கிரஸ் கட்சி. ஆனால் நிமிடத்துக்கு நிமிடம் நிறம் மாறும் தன்மை கொண்டவன் நான் என்பதை விஜய் நிமிடத்துக்கு நிமிடம் நிரூபித்துக் கொண்டு இருக்கிறார்.**

**41 பேர் மரணத்துக்குக் காரணமான கரூர் சம்பவத்தை சி.பி.ஐ. விசாரிப்பதாலும், பல்வேறு வருமான வரி வழக்குகளாலும் பா.ஜ.க. என்ற பெயரையே உச்சரிக்கப் பயந்து கொண்டு இருப்பவர் முதலமைச்சர் விஜய். அவரது ஆட்சிக்கு இரண்டு உறுப்பினர்களைக் கொண்டு முட்டுக் கொடுத்து வருகிறது காங்கிரஸ் கட்சி. எனவே காங்கிரஸ் கட்சியையும் அவரால் பகைத்துக் கொள்ள முடியாது. எனவேதான் காங்கிரஸ் இழுப்புக்காக ஒரு கூட்டத்தைப் போட்டார் விஜய். உள்துறை அமைச்சர் அமித்ஷாவைப் பார்த்ததும், அவர் சொல்வதற்கும் தலையாட்டி விட்டு வந்து விட்டார் விஜய்.**

20.8.2026 அன்று உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடைபெற்ற தென்மண்டல கவுன்சில் கூட்டத்தில், உரையாற்றிய முதலமைச்சர் விஜய், “நமது பிரதிநிதித்துவம் குறைக்கப்படக் கூடாது. மாநிலங்களைத் தண்டிக்கக் கூடாது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக எந்தவொரு மாநிலத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ சதவிகிதமும் குறையாது என்ற தெளிவான சட்டபூர்வமான உறுதிமொழியை ஒன்றிய அரசு வழங்க வேண்டும்” என்று பேசி இருக்கிறார் விஜய்.

**அதாவது ‘எந்த மாநிலமும் பாதிக்கப்படாத வகையில் தொகுதி மறுவரையறை அமைய வேண்டும்’ என்று சொல்லி இருக்கிறார் விஜய். ஒரே வாரத்தில் தொகுதி மறுவரையறை விவகாரத்தில் பல்டி அடித்து விட்டார் விஜய். இதற்கு காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக கட்சிகளின் பதில் என்ன? ‘தொகுதி மறுசீரமைப்பை ஆதரிப்பவர்கள் தமிழ்நாட்டின் எட்டப்பர்கள்’ என்று ராகுல் காந்தி சொன்னார். யாரைச் சொன்னார் ராகுல்?**

**ஐந்து காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ஆதரவுக்காக ஒரு கூட்டம் போட்டு அவர்கள் கணக்கை முடித்த விஜய், கரூர் 41 பேர் மரண சம்பவத்தில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க. சொல்வதையும் ஆதரித்துவிட்டார். இப்படி பச்சையாக நிறம் மாறுவதை தைரியமாகச் செய்வது தான் விஜய்யின் துணிச்சல் ஆகும். ‘சத்தமாகச் சொல்லி விட்டால் பொய்யும் உண்மையாகும்’ என்பதைப் போல!**





கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (21.08.2026), ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். அப்போது, இந்தியாவின் உயரிய இலக்கிய விருதான ஞானபீட விருதினை அண்மையில் பெற்ற கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்குக் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்து, வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - இயக்குநர் அமிர்தம் இல்லத் திருமணம்!

## உதயநிதி ஸ்டாலின் முன்னிலை! கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஆக. 22-

**இயக்குநர் அமிர்தம் அவர்கள் இல்லத் திருமணவிழா, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் - கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஆக.24 - திங்கள் கிழமை அன்று நடைபெறுகிறது.**

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு :-

இயக்குநர் அமிர்தம் - திருமதி வசந்தா ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும், (நினைவில் வாழும்) பெ.பெரியசாமி - மாசிலாமணி ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், டாக்டர் பெ. சதீஸ் குமார் - டாக்டர் ச.கலைச்செல்வி ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் ச.இலக்கியாவிற்கும் - கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், (நினைவில் வாழும்) கு.கோபாலரெட்டி - கோ.நஞ்சம்மா ஆகியோரின் மகன் வழிப் பேரனும் ஒசூர் கே. கும்மிரெட்டி - எஸ். ரூபா ஆகியோரின் புதல்வருமான டாக்டர் கு. கிரிதராவிற்கும் திருமணம் 24.08.2026 - திங்கள்கிழமை அன்று காலை 9.15 மணியளவில் சென்னை - திருவான்மியூர் - ‘ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டர்’ திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று - திருமணத்தை நடத்திவைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

இயக்குநர் அமிர்தம் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

முன்னதாக - மணவிழா வரவேற்பு 23.08.2026 - ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் கழக முன்னணியினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவிற்கு வருகை தருவோரை அ. குணாநிதி அமிர்தம், கு.ஹேமமாலின் குணாநிதி, கு.சூர்யா குணாநிதி, கு.ஸ்ரேயா குணாநிதி ஆகியோர் வரவேற்கின்றனர்.

### அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராகத் துணிச்சலுடன் போராடி

# தமிழ் மண்ணின் வீர வரலாற்றில் அழியாத தடம் பதித்த மாவீரர் ஒண்டிவீரன் புகழ் போற்றுவோம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 22-


அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராகத் துணிச்சலுடன் போராடி, தமிழ் மண்ணின் வீர வரலாற்றில் அழியாத தடம் பதித்த மாவீரர் ஒண்டிவீரன் புகழ் போற்றுவோம் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

**விடுதலைப் போரில் பங்கேற்று வீரப்போர் புரிந்த ஒண்டிவீரன் அவர்களின் நினைவு நாள் இன்று!**

**அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராகத் துணிச்சலுடன் போராடி, தமிழ் மண்ணின் வீர வரலாற்றில் அழியாத தடம் பதித்த மாவீரர் ஒண்டிவீரனின் புகழைப் போற்றுவோம்.**

**பூலித்தேவரின் படைத்தளபதியாக தென் தமிழ்நாட்டில் விடுதலைக்கான எழுச்சியை**



**உருவாக்கிய ஒண்டிவீரன் அவர்களின் வீரமும் தியாகமும் என்றும் நிலைத்திருக்கும்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டில் தற்போது நடைபெறும் த.வெ.க. ஆட்சி

# சங்கிகளின் அதிகார வர்க்க ஆட்சி!

## இந்திய கம்யூனிஸ்ட் - கே.சுப்பராயன் கடும் விமர்சனம்!

*சென்னை, ஆக. 22 -*

*தமிழ்நாட்டில் தற்போது நடப்பது சங்கிகளின் அதிகார வர்க்கத்தின் ஆட்சி என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது.*

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதவில் கூறியிருப்பதாவது :-*

*தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி நடக்கிறது என்பது முழு உண்மையல்ல! தோற்றத்தில் த.வெ.க. ஆட்சி! ஆனால், உள்ளடக்கத்தில் அதிகார வர்க்கத்தின் ஆட்சிதான் நடக்கிறது! என்று விமர்சித்துள்ளார். அந்த அதிகார வர்க்கத்தை இயக்குவது சங்கிகளின் கருத்தோட்டங்களே!*

*அதனால்தான் கம்யூனிச சிந்தனை கொண்ட மாணவர்களைக் குறிவைத்துக் கணக்கெடுக்கிறது! என்று அவர்*



*குற்றஞ்சாட்டியுள்ளார்.*

*ஆட்சியாளர்களில் இரு வகை உண்டு! ஒன்று, ஆட்சியாளர்களை அதிகாரிகள் இயக்குவது! இரண்டாவது, அதிகாரிகளை ஆட்சியாளர்கள் இயக்குவது! இதில் முதல் வகையைச் சேர்ந்ததே த.வெ.க. அமைச்சரவை! என்றும் கே.சுப்பராயன் விமர்சித்துள்ளார்.*

*கம்யூனிஸ்டு மாணவர்களைக் குறிபார்த்துப் பட்டியலிட்டது குறித்து முதல்வர் வாயே திறக்கவில்லையே ஏன்? என்று கேள்வி எழுப்பியுள்ள கே.சுப்பராயன, இது குறித்து முதல்வர் விஜய் விளக்கமளிக்க வேண்டும்! என்று வலியுறுத்தியுள்ளார்.*

*அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்திய பிரதமர் மோடியிலிருந்து தமிழ்நாட்டு அதிகாரிகள் வரை, அச்சப்பட்டுக் கலங்குவது, மார்க்சிய தத்துவ ஞானத்தை தாங்கி நிற்கிற கம்யூனிஸ்டுகளைக் கண்டு தான்! கார்ப்பரேட்டுகளும், அந்திய நேரடி முதலீடுகளும், ஏகாதிபத்தியங்களும் அஞ்சி நடுங்கிச் சாகட்டும்! தொழிலாளி விவசாய வர்க்க ஒற்றுமைச் சின்னமான செங்கொடி அதன் போர்க்கொடியே! என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் தனது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.*